கருக்கம்

பணியமைப்பு— கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பணியிடத்தினை நிரப்புதல்— ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (2டி) எண்.11

நாள்: 16 .02.2009
திருவள்ளுவர் ஆண்டு 2040,
மாசி மாதம் 4—ம் நாள்
படிக்க

1. அரசாணை (பத்தாண்டு) எண்.350, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள்18.8.2008
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 4488/எப்4/2008—5, நாள் 15—10—2008
3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி கடித எண்.10744/07/எம்ஸி1, நாள் 8—12—2008
4. அரசாணை (2டி) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் 16—12—2008
5. அரசு கடித எண்.36451/மாந4/08—1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் 30—12—2008
6. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 4488/எப்4/2008—5, நாள் 4—2—2009

ஆணை:-

கோவை மாநகராட்சி நகரப் பொறியாளராக பணியாற்றி வந்த திரு ராஜு 31.8.2007 அன்று பணிஓய்வு பெற்றதனால், நகரப் பொறியாளர் பணியிடம் காலியாக இருந்தது. அம்மாநகராட்சியில் செயற்பொறியாளராக பணியாற்றிவரும் திரு.பா.கணேஸ்வரன் அவர்கள், மேற்கொண்டு ஆணைகள் வெளியிடப்படும்வரை, தற்காலிகமாக கூடுதல் பொறுப்பு வகிக்க பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. மேலும் அவ்வாணையில் நகரப் பொறியாளர் பதவியினை நிரந்தர அடிப்படையில் நிரப்ப தக்க செயற்குறிப்பு அளிக்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 15.10.2008 நாளிட்ட கடித்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பணியிடம் மட்டுமின்றி, JNNURM கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் மதுரை மாநகராட்சியில் JNNURM கண்காணிப்புப் பொறியாளர் ஆகிய பணியிடங்களை நிரப்பவும் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். அதில் தற்போது காலியாக உள்ள நகரப் பொறியாளர் பதவிக்கு தகுதி பெற்ற செயற் பொறியாளர் கோயம்புத்தூர் மாநகராட்சியில் யாரும் இல்லை எனவும், அப்பணியிடத்தில் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணியைச் சார்ந்த தகுதிவாய்ந்த செயற் பொறியாளருக்கு கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு வழங்கி அவரை அயற்பணியில் நகரப் பொறியாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார். இப்

பொருள்குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் மீண்டும் கலந்தாலோசிக்கப்பட்டது. அவர் பார்வை 6-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தன்னால் கோயம்புத்தூர் மாநகராட்சி நகரப் பொறியாளர் பணியிடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட திரு கே.பூபதி அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் JNNURM கண்காணிப்புப் பொறியாளராக பார்வை 4ல் படிக்கப்பட்ட அரசாணை மூலம் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், அவருக்கு அடுத்தபடியாக பணிமூப்புப் பட்டியலில் மூத்தவராக, தற்போது செங்கற்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் செயற் பொறியாளராக (திட்டங்கள்) பணியாற்றும் திரு.கே.பாலசுப்பிரமணியம் அவர்கள் உள்ளதாகவும், அவர் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு தகுதி பெற்றவர் எனவும், அவருக்கெதிராக துறை ஒழுங்கு நடவடிக்கைகளோ ஊழல் தடுப்புத் துறை நடவடிக்கைகளோ இல்லை எனவும், அவர் எந்த தண்டனையும் தற்போது அனுபவித்து வரவில்லை எனவும், அவர் நகரப் பொறியாளராக நியமிக்கத் தகுதி வாய்ந்தவர் எனவும், எனவே, அவருக்கு கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வளித்து அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் ரூ12,000–375–16,500/– என்ற சம்பள விகிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி நகரப் பொறியாளராக நியமிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்தபின், கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த அலுவலர் கோயம்புத்தூர் மாநகராட்சியில் இல்லாததால், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணியைச் சார்ந்த செங்கற்பட்டு, மண்டல செயற் பொறியாளர், திரு.கே.பாலசுப்பிரமணியம், அவர்களை நகரப் பொறியாளருக்குரிய, ரூ.12,000–375–16,500 என்ற சம்பள விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் கோயம்பத்தூர் மாநகராட்சியில், நகரப் பொறியாளர் பதவியில் நியமித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
திரு.கே.பாலசுப்பிரமணியம், மண்டல செயற் பொறியாளர், செங்கற்பட்டு
(நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108
நகல்
நிதித் துறை, சென்னை–600009
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3/நப4/அந2) துறை, சென்னை–9.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

சந்திரசேகரன்
பிரிவு அலுவலர்